Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 6 பக்கம் செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 31, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 48

100 நாளில் மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்திய ஒரே கட்சி திமுகதான்-முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம்

செஞ்சி, ஆக 31 2021: 100 நாட்களில் மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தி சாதனை படைத்த ஒரே கட்சி திமுகதான் என முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் வல்லம் ஒன்றியம் நாட்டார்மங்கலத்தில் சனிக்கிழமை நடைபெற்ற உள்ளாட்சி தேர்தல் தொடர்பான அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்.

வல்லம் தெற்கு ஒன்றிய அதிமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மற்றும் நெகனூரில் நடைபெற்ற வல்லம் வடக்கு ஒன்றிய அதிமுக நிர்வாகிகள் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்திற்கு அதிமுக வல்லம் வடக்கு ஒன்றிய செயலர் கு.விநாயகமூர்த்தி தலைமை வகித்தார். வல்லம் வடக்கு ஒன்றிய அம்மா பேரவை செயலர் பன்னீர்செல்வம், வட்டார கல்விக்குழுத்தலைவர் ஆனந்தி அண்ணாதுரை, சுகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் அமைச்சரும் விழுப்புரம் மாவட்ட செயலருமான சி.வி.சண்முகம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ஆலோசனைகளை வழங்கினார்.

கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் பேசியது.

திமுக ஆட்சி பொறுப்பேற்ற 100 நாட்களில் மக்களிடம் அதிருப்தியை தேடிக்கொண்ட ஒரே கட்சி திமுகதான். அதிமுகவின் திட்டங்களான அம்மா ஸ்கூட்டி மற்றும் கிராம புற ஏழைகள் வாழ்வாதாரம் உயர ஆடு, கோழி, மாடுகள் வழங்கும் திட்டம், மாணவர்களுக்கான மடிக்கணினி வழங்கும் திட்டம் ஆகியவற்றை திமுக ஆட்சியில் நிறுத்தப்பட்டுள்ளது. 2 ஏக்கர் நிலம் தருவதாக கருணாநிதி கூறினார். ஆனால் வழங்கவில்லை. அதே போன்று குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம்தோறும் ரூ 1000 வழங்கப்படும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆனால் தந்தையை போன்று இவரும் வழங்கவில்லை.

விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை மாவட்ட மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஜெயலலிதா பல்கலைகழகம் விழுப்புரத்தில் தொடங்கப்பட்டது. ஆனால் நிதி இல்லை என கூறி பல்கலைகழகத்தை மூடிவிட்டனர். 10 ஆண்டு கால அதிமுக ஆட்சியில் ஒரு நாளும் பணம் இல்லை என நாங்கள் கூறவில்லை. ஆனால் மூன்று மாத திமுக ஆட்சியில் எதற்கெடுத்தாலும் பணம் இல்லை என கூறுகின்றனர். பணம் வரும் வழியை தேடாமல் அதிமுக மீது குறைகூறுகின்றனர்.

உச்சநீதி மன்றம் தமிழகத்தில் நடைபெறாமல் உள்ள 9 மாவட்டங்களில் உள்ளாட்சி தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. வல்லம் ஒன்றியத்தில் அதிமுக வெற்றி பெற்று திமுக ஆட்சியை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இந்த உள்ளாட்சி தேர்தல் மூலம் திமுகவிற்கு பாடம் புகட்ட வேண்டும் என பேசினார்.

கூட்டத்தில் அவைத்தலைவர்கள் கோபாலகிருஷ்ணன், கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய பொருளர்கள் வெங்கடேசன், அசோக்குமார், பேரவைச்செயலர் மனோகரன், நிர்வாகிகள் செந்தாமரைக்கண்ணன், லட்சாதிபதி, மஞ்சுளாகுமார், களையூர் ரவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்ட பகுதியை பார்வையிட்டார்

மதுரை, ஆகஸ்ட் 31 2021: மதுரை மாவட்டம், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி புதுநத்தம் சாலையில் நாராயணபுரம் அருகில் கட்டுமான பணியின் போது பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்ட பகுதியை பார்வையிட்டார்.

மதுரை மாவட்டம் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் புதுநத்தம் சாலையில் நாராயணபுரம் அருகில் கட்டுமான பணியின் போது பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்ட பகுதியை பார்வையிட்டு தெரிவிக்கையில்.

மதுரை மாவட்டத்தில் பாண்டியன் ஹோட்டல் முதல் செட்டிகுளம் வரையிலான நத்தம் சாலையினை இணைக்கின்ற வகையில் ரூ.545 கோடி மதிப்பில் 7.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு இந்த மேம்பாலம் கட்டும் பணி கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. நேற்றைய தினம் விபத்து ஏற்பட்ட உடன் உடனடியாக தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் அவர்களும் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் விபத்து பகுதியினை பார்வையிட்டனர். இந்த விபத்தின் போது உத்திரபிரதேசத்தை சேர்ந்த திரு.ஆகாஷ் சிங் என்ற 26 வயது நபர் உயிரிழந்துள்ளார். மேலும் இது தவிர பொதுமக்களுக்கோ, வேறு பணியாளர்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என மாவட்ட ஆட்சியர் விபத்து நடந்த இடத்தை நேற்றைய தினம் ஆய்வு செய்த போது தொலைபேசி வாயிலாக கேட்டறிந்தேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க இன்றைய தினம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் விபத்து நடந்த பகுதியினை பார்வையிட்டனர். மேலும் என்.ஐ.டி தொழில்நுட்ப நிபுணர் திரு.பாஸ்கரன் அவர்கள் தலைமையிலான குழு விபத்து குறித்து ஆய்வு மேற்கொள்ள உள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை இத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இதற்கு முன்னர் இருந்த ஆட்சித்தலைவரிடம் பாலம் கட்டும்போது கீழ் உள்ள சாலைகளும் அமைக்க வேண்டுமென வலியுறுத்தினேன். இதுநாள் வரை மேம்பாலம் பணிகள் மேற்கொள்ளும் நிறுவனம் இதுவரை சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளவில்லை. மேம்பாலம் பணிகளால் இடையூறு ஏற்பட்டுள்ள பொதுமக்களுக்கு பாலத்தின் கீழ் இருபுறமும் சாலைகள் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக அறிவுறுத்தப்படும். மேலும் சாலை பணிகள் முடிந்த பின்பு மேம்பாலம் கட்டும் பணியினை தொடர வேண்டுமென மேம்பாலம் கட்டும் ஒப்பந்ததாரரிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரரின் அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டிருக்கின்றது. இதுபோன்ற விபத்துகள் நடைபெறாமல் இருக்க தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர், மாநகராட்சி ஆணையாளர் மரு.கா.ப.கார்த்திகேயன், உள்ளிட்ட நெடுஞ்சாலைத்துறை அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு மதுரை திருப்பாலையில் நடைபெற்ற ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி திருக்கோவில் கும்பாபிஷேகம் அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்பு

மதுரை, ஆகஸ்ட் 31 2021: கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு மதுரை திருப்பாலையில் நடைபெற்ற ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி திருக்கோவில் கும்பாபிஷேகம் - அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்பு.

இந்துக்களின் முக்கிய பண்டிகையான ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி நாடு முழுவதும் கொண்டாடபடுகிறது.

அனைத்து கிருஷ்ணர் ராமர், பெருமாள் திருக்கோவில்களில் ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கு விசேஷ அலங்காரம், பூஜைகள் தீபராதனைகள் நடைபெற்று வருகிறது.

அந்தவகையில் மதுரை மாவட்டம் திருப்பாலையில் அமைந்துள்ள ஸ்ரீராதாதேவி திருக்கோவில் அஷ்டபந்தன சமேத கிருஷ்ணன் மஹா ஸம்ப்ரோஷணம் வெகுவிமரிசையாக சிறப்பாக நடைபெற்றது.

கணபதி ஹோமம் உட்பட யாகவேள்விகள் மூலம் மேளதாளங்கள் முழங்க யாகசாலையில் வைத்து பூஜிக்கப்பட்ட புனிதநீர் கலசங்களை பட்டாச்சாரியார்கள் தலையில் சுமந்து கருடன் வட்டமிட கோபுர கலசங்களுக்கு ஊற்றப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வணிகவரிதுறை அமைச்சர் பி.மூர்த்தி, அன்னபூர்ணாதங்கராஜ், ஊமச்சிகுளம், திருப்பாலை உட்பட சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து ஏராளமான பொதுமக்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

பாரத பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வீடு கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சியர் டாக்டர். ஜெயச்சந்திரபானு ரெட்டி ஆய்வு

கிருஷ்ணகிரி, ஆகஸ்ட் 31 2021: கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம் மாடல்கள் ஊராட்சி திட்டத்தின் கீழ் டி. சூலகுண்டா கிராமத்தில் ரூபாய் 1.70 லட்சம் மதிப்பில் பாரத பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளி நாராயணன் என்பவர் வீடு கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சியர் டாக்டர் ஜெயச்சந்திரபானு ரெட்டி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கிருஷ்ணகிரியில் சென்னையைச் சேர்ந்த ஆடிட்டர் கடத்தி கொலை. 6 பேர் கைது

கிருஷ்ணகிரி, ஆகஸ்ட் 31 2021: கொட்டும் மழையிலும் சென்னையைச் சேர்ந்த ஆடிட்டர் கொலை வழக்கில் கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாய்சரண் தேஜஸ்வி தலைமையில் கிருஷ்ணகிரி நகர காவல் துறையினர் அதிரடியாக உடலை கைப்பற்றியும் கொலை செய்தவர்களையும் உடனடியாக கைது செய்தனர்.

சென்னை வேளச்சேரி பகுதியை சேர்ந்தவர் ஜனரஞ்சன் பிரதான்(48) இவர் ஆடிட்டராக பணிபுரிந்து வந்தார் இவர் தன்னுடன் பணி புரியும் கிருஷ்ணகுமார் என்பவருடன் கடந்த 26ஆம் தேதி காலை சென்னையில் இருந்து வேலூருக்கு காரில் புறப்பட்டு வந்தார். இவர்களுடன் பணிபுரியும் சபரிஸ் என்பவர் வேறொரு காரில் வந்தார் அன்று இரவு 10 மணி அளவில் ஜன ரஞ்சன் பிரதான் தன் மனைவி பூர்ணிமா பிரதானக்கு போன் செய்து தான் வேலூருக்கு வந்த வேலை முடிந்து விட்டது. எனவே மறுநாள் கிருஷ்ணகிரியில் வேலை உள்ளது அங்கு செல்கிறேன் என்று கூறியுள்ளார். இந்த நிலையில் கடந்த 27 ஆம் தேதி ஜன ரஞ்சன் பிரதானுக்கு அவரது மனைவி போன் செய்தார் போனை எடுக்காததால் இதுகுறித்து கடந்த 28 ஆம் தேதி கிருஷ்ணகிரி நகர காவல் நிலையத்தில் புகார் அளித்தார் அதன்பேரில் வழக்குப்பதிவு செய்து கிருஷ்ணகிரி மாவட்ட போலீசார் விசாரணை நடத்தி வந்தனர். விசாரணை நடத்தியதில் ஜனரஞ்சன் பிரதான் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்னையில்

கடத்திச் சென்று கொலை செய்தது தெரியவந்தது. இதையடுத்து கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாய் சரண் தேஜஸ்வி தலைமையில் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு அன்பு மற்றும் போலீசார் நேற்று மாலை ஊத்தங்கரை அருகே உள்ள சாமல்பட்டி அடுத்த கொல்லப்பட்டி என்ற கிராமத்தில் உள்ள ஒரு மாந்தோப்பில் புதைக்கப்பட்டிருந்த ஜனரஞ்சன் பிரதான் உடலை தோண்டி எடுத்தனர். பின்னர் கைப்பற்றிய உடலை பிரேத பரிசோதனைக்காக ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த கொலை சம்பந்தமாக சென்னையைச் சேர்ந்த கிருஷ்ணகுமார், சபரீஷ், மற்றும் இவர்களது கூட்டாளிகள் 6 பேரை கிருஷ்ணகிரி நகர காவல் துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

விவசாயிகளுடன் ஒருநாள் திட்ட அறிமுக விழா எம்.எல்.ஏ., பங்கேற்பு

விக்கிரவாண்டி, ஆக. 31 2021: விக்கிரவாண்டி ஒன்றியம் ஆசூரில் வேளாண்மை துறை ,உழவர் நலத்துறை சார்பில் வேளாண் வளர்ச்சியை மையப்படுத்தி விவசாயிகளுடன் ஒரு நாள் திட்ட அறிமுக விழா . எம்.எல்.ஏ., புகழேந்தி பங்கேற்பு.

தமிழக முதல்வர் ஸ்டாலின் ,வேளாண்மை பட்ஜெட்டில் விவசாயிகளுடன் ஒரு நாள் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி தொகுதி எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்ற உத்திரவிட்டார். இதையடுத்து நேற்று தமிழகத்தில் முதன் முதலாக விக்கிரவாண்டி ஒன்றியம் ஆசூர் கிராமத்தில் நடந்த விவசாயிகளுடன் ஒரு நாள் திட்ட அறிமுக நிகழ்ச்சியில் தொகுதி எம்.எல்.ஏ., புகழேந்தி தலைமை தாங்கி திட்டத்தை துவக்கி வைத்து விவசாயிகளின் கோரிக்கையை கேட்டறிந்தார்.

ஒன்றியத்திலுள்ள 13 விவசாய குழுக்களை ஒன்றினைத்து கம்பெனியாக மாற்றி விவசாயிகளின் முக்கிய கோரிக்கையான இப்பகுதியில் அதிகம் மகசூல் செய்யப்படும். உளுந்து பயிரை தோல் நீக்கி முதல்தரம், இரண்டாம் தரம் என ரகங்கள் பிரித்து விற்பனை செய்யவும், பால் பாக்கட், கைக்குத்தல் அரிசி விற்பனை போன்ற நடவடிக்கை எடுக்கவும் அதிகாரிகளுக்கு உத்திரவிட்டார். ஒன்றியத்தில் இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள ஆசூர், பிடாரிப்பட்டு, முட்டத்தூர், முண்டியம்பாக்கம் , மூங்கில்பட்டு, பனப்பாக்கம், பனையபுரம் கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் அதிகளவில் பயன்பெற கேட்டுக் கொண்டார் .

முன்னதாக வேளாண் உதவி இயக்குனர் டாக்டர். மாதவன் வரவேற்றார்.

உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜா,ஆனந்தி, தி.மு.க.,மாவட்ட தலைவர் ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் புஷ்பராஜ், ஒன்றிய செயலாளர்கள் வேம்பிரவி, ரவிதுரை ,மாவட்ட துணை அமைப்பாளர்கள் பாபு ஜீவானந்தம், பாலாஜி, முரளி, ராஜசேகரன், மாவட்ட பிரதிநிதி வெங்கடேசன், முன்னாள் இளைஞரணி அமைப்பாளர் எத்திராசன், கிளை செயலாளர் வேணுகோபால், பாபு, ஒன்றிய மகளிரணி முத்துலட்சுமி உட்பட முன்னோடி விவசாயிகள் ,கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி ஒன்றியம் ஆசூர் கிராமத்தில் விவசாயிகளுடன் ஒரு நாள் அறிமுக நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ., புகழேந்தி பேசினார். அருகில் உதவி இயக்குனர் மாதவன். ஒன்றிய செயலாளர் வேம்பிரவி.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

செவ்வாய்க்கிழமை,
ஆகஸ்ட் 31, 2021

பணம் வைத்து சூதாட்டம் ஆடிய மூன்று பேர் கைது

கிருஷ்ணகிரி, ஆகஸ்ட் 31 2021: கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அருகே உள்ள மத்தூர் போலீசாருக்கு களர்பதி கிராமம் கலைஞர் நகர் பகுதியில் பணம் வைத்து சூதாட்டம் ஆடுவதாக வந்த ரகசிய தகவலின் பேரில் போலீசார் அந்த பகுதியில் ரோந்து சென்றனர் அப்போது அங்கு பணம் வைத்து சூதாட்டம் ஆடிக்கொண்டிருந்த தளபதியை சேர்ந்த சென்னப்பன் வயது (36) வயது (40) ரமேஷ் வயது (45) ஆகிய 3 பேரையும் கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர் அவர்களிடமிருந்து ரூபாய் 1200 பறிமுதல் செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை இந்திரா நகர் பகுதியைச் சேர்ந்தவர் அங்கமுத்து இவருடைய மகள் கௌசல்யா வயது (18) +2 படித்துள்ளார். தற்போது இவர் வீட்டில் இருந்து வருகிறார். இந்த நிலையில் கௌசல்யாவுக்கு திருமணம் செய்ய அவருடைய பெற்றோர் ஏற்பாடு செய்தனர். திருமணம் செய்ய விருப்பம் இல்லை என்று கௌசல்யா எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இதனால் மனமுடைந்த கவுசல்யா வீட்டில் யாரும் இல்லாத போது தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். தகவல் அறிந்த ஊத்தங்கரை போலீசார் அவருடைய உடலை கைப்பற்றி உடற்கூறு ஆய்வுக்காக ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இச்சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

DTP
DESIGN
All Online Services
8144337349

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே உள்ள தருவதிம்மன ஹள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர் சுரேஷ் வயது (21) விவசாயி இவர் (9)வயதான மனநலம் பாதிக்கப்பட்ட சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது இது குறித்து சிறுமியின் உறவினர்கள் தேன்கனிக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர் அதன் பேரில் போலீசார் சுரேஷ் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திண்டிவனம்: விழுப்புரம் மாவட்டம், மயிலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெரியதச்சூர் அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் உள்ள பாரதி என்பவரின் கூரை வீடு கடந்த 26ஆம் தேதி மின்கசிவு காரணமாக தீப்பற்றி எரிந்து தீயில் கருகி சேதமடைந்தது. இதுகுறித்து தகவலறிந்த திண்டிவனம் தொழிலதிபர் சந்திரசேகர் விபத்தில் சேதமடைந்த பாரதி குடும்பத்திற்கு ரூ 10,000 நிதி உதவி மற்றும் மளிகை சாமான்கள் வீட்டு உபயோகப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வன்னியர் சங்க மாவட்ட செயலாளர் நந்தகோபால், மாநில இளைஞரணி செயலாளர் பிரேம்குமார், ஒன்றிய செயலாளர் துரைராஜ், மாவட்ட தொண்டரணி செயலாளர் ராமச்சந்திரன், மாவட்ட ஆட்டோ தொழிற்சங்க செயலாளர் தேசிங்கு, மாவட்ட ஊடகப்பிரிவு செயலாளர் கேசவன் மற்றும் ஜெயமூர்த்தி, மதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் விருந்தோம்பல் கல்வி நிறுவனத்துடன் சோமெட் கல்வி நிறுவனம் கூட்டு

சென்னை, ஆகஸ்ட் 31 2021: சோமெட் கல்வி நிறுவனம் விருந்தோம்பல் கல்வி துறையில் அதன் விரிவாக்கத்தின் மற்றொரு படியாக இந்திய விருந்தோம்பல் கல்வி நிறுவனமான இந்தியன் ஸ்கூல் ஆஃப் ஹாஸ்பிடாலிட்டி (ஐஎஸ்ஹெச்) உடன் இணைந்து பணியாற்றவுள்ளதாக இன்று அறிவித்துள்ளது. இதன்மூலம், சோம்மெட் கல்வி அதன் இரண்டு முக்கிய கல்வி நிறுவனங்களான எக்கோல் டுகாஸ் மற்றும் லெஸ் ரோச்ஸ்-ஐ இந்தியாவின் விருந்தோம்பல் கல்வி துறையில் ஈடுபடுத்தவுள்ளது.

இது குறித்து சோமெட் கல்வி நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பெனாய்ட்-எட்டியென் டோமெங்கெட் கூறுகையில், சோமெட் கல்வி நிறுவனம் உலகளவில் விருந்தோம்பல் மற்றும் சமையல் கல்வியின் முன்னணி நெட்வொர்க்கை வடிவமைத்து வளர்ந்து வருகிறது. விருந்தோம்பல் மற்றும் தொடர்புடைய துறைகளில் வளர்ச்சி பெற்று வரும் நாடுகளில் ஒரு முக்கிய அங்கமாக இருக்க இது எங்களுக்கு உதவுகிறது. உலக அளவில் புகழ்பெற்ற விருந்தோம்பல், சமையல் மற்றும் மேலாண்மை கல்வி ஆகியவற்றை இந்திய மாணவர்களுக்கு வழங்குவதற்காக ஐஎஸ்ஹெச் உடன் நாங்கள் இணைவதால் மகிழ்ச்சியடைகிறோம் என்று கூறினார்.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் விருந்தோம்பல் மற்றும் சேவைத் துறையின் உலகளாவிய வளர்ச்சிக்கு தொலைநோக்கு பார்வையுடைய கல்வி நிறுவனங்கள் தேவை. இதன் காரணமாக இந்தியன் ஸ்கூல் ஆஃப் ஹாஸ்பிடாலிட்டி கல்வி நிறுவனம் டெல்லி என்சிஆர்-இன் குருகிராமில் நாட்டின் மிகச்சிறந்த விருந்தோம்பல் மேலாண்மை மற்றும் சமையல் கலைகளுக்கான கல்வி நிறுவனத்தை அமைத்துள்ளது. இந்நிறுவனம் பட்டப்படிப்பு மற்றும் சான்றிதழ் திட்டங்களை இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளில் வழங்குகிறது. இந்த கூட்டணி மூலம் ஐஎஸ்ஹெச் கல்வி நிறுவனம் மாணவர்கள் இந்தியாவில் தங்கள் படிப்பை தொடங்கவும், வெளிநாடுகளில் படிப்பை தொடரவும், சுவிட்சர்லாந்தின் லெஸ் ரோச்ஸ் கல்வி நிறுவனத்தில் மாணவர்கள் மேலாண்மை கல்வி கற்கவும் வழிவகை செய்கிறது.

ஐஎஸ்ஹெச்-இன் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திலீப் பூரி கூறுகையில், ஐஎஸ்ஹெச் உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பம் மற்றும் உள்கட்டமைப்பு மற்றும் புகழ்பெற்ற கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆசிரியர்கள் மூலம் மாணவர்களுக்கு உயர்வான கல்வியை வழங்கி வருகிறது. சோமெட் கல்வி நிறுவனத்துடன் கூட்டு சேர்வது, இந்தியா மற்றும் அண்டை நாடுகளில் எங்கள் இருப்பை விரிவுபடுத்தவும், 8 நாடுகளில் உள்ள 18 வளாகங்கள் மற்றும் 60,000 முன்னாள் மாணவர்களின் ஆதரவுடனும் எங்கள் வலையமைப்பை வலுப்படுத்த உதவும் என்று கூறினார்.

சுப்பாக்கி சுடும் போட்டியில் தென்காசி காவல் கண்காணிப்பாளர் வெற்றி

தூத்துக்குடி, ஆகஸ்ட் 31 2021: தென் மண்டல அளவிலான துப்பாக்கி சுடுதல் போட்டி தூத்துக்குடி மாவட்டம் வல்லநாட்டில் உள்ள துப்பாக்கி சுடும் பயிற்சி தளத்தில் திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் செந்தாமரை கண்ணன் தலைமையில் நடைபெற்றது. இந்த போட்டியில் 09 காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் 02 உதவி காவல் கண்காணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டியில் கலந்து கொண்ட தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிருஷ்ணராஜ் முதல் கட்டமாக 9எம்.எம். பிஸ்டல்/ரிவால்வர் - 25 மீட்டர் சுடும் போட்டியில் முதலிடமும், இரண்டாம் கட்டமாக ஐஎன்எஸ்ஏஎஸ் ரைபில்-50 யார்ட் சுடும் போட்டியில் மூன்றாம் இடமும் பிடித்து துப்பாக்கி சுடும் போட்டியில் மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் முதலிடம் பிடித்து வெற்றி பெற்றார்.

வெற்றிபெற்ற தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிருஷ்ணராஜிற்கு திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் செந்தாமரைக்கண்ணன் வெற்றிக் கோப்பை வழங்கி கௌரவித்தார்.

வருஷநாடு, கடமலை மயிலை ஒன்றியம் குமணன் தொழு ஊராட்சியில் அன்னதானம்

வருஷநாடு, ஆகஸ்ட் 31 2021: தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டம் கடமலை மயிலை ஒன்றியம் குமணன் தொழு ஊராட்சியில் விவசாயி கோபி என்பவர் அன்புடன் அன்னம் என்ற பெயரில் கொரோனா காலகட்டத்திலிருந்து இன்றுவரை நாள்தோறும் மதிய உணவு முதியவர்கள் மற்றும் வறுமையில் வாடுபவர்கள் என தினம் 100 பேருக்கு தனது சொந்த செலவில் அன்னதானம் செய்து வருகின்றார். இவரது இந்த நற்செயல் அப்பகுதியில் பலரது பாராட்டுகளைப் பெற்றுள்ளது. இவருக்கு உதவிட நல்லெண்ணம் கொண்ட சிலர் அவ்வப்போது உதவி செய்து வருகின்றனர்.

மேலும் இவரது தானம் மென்மேலும் தொடர கருணை உள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்து தொடர்ந்து அன்னதானம் நடத்திட உதவுங்களென அப்பகுதி சமூக ஆர்வலர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

தானத்தில் சிறந்த தானம் அன்னதானம் அந்த அன்னதானத்திற்கு தங்களால் இயன்ற பொருள் உதவி செய்திட மற்றும் சேவகர் விவசாயி கோபியை வாழ்த்திட 96 260 98 600 என்ற எண்ணிற்கு அழைக்கலாம்.

விழுப்புரம் அருகே கோவில் திருவிழாவில் வெடிகுண்டு வீசி வாலிபர் கொலை முயற்சி ஐந்து ரவுடிகள் கைது

விழுப்புரம், ஆக. 31 2021: விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் அருகே உள்ள பள்ளிபுதுப்பட்டு பெரிய காலனி பகுதியில் மாரியம்மன் கோயில் உள்ளது. இந்த கோயில் திருவிழா வருடம் தோறும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இந்த ஆண்டு திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இங்கு புதுச்சேரி முத்தையால்பேட்டையை சேர்ந்த பிரபல ரவுடி தென்னரசு (21), இவரது ஆதரவாளர்கள் மற்றும் உறவினர்கள் இங்கு வசிக்கின்றனர். இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற திருவிழாவில் தென்னரசு மற்றும் இவரது ஆதரவாளர்கள் பள்ளிபுதுப்பட்டு திருவிழாவிற்கு வந்தனர். அங்கு கஞ்சா மற்றும் மது அருந்தி உள்ளனர். போதை தலைக்கேறியதும் தென்னரசு ஆதரவாளர்கள் பைக்கில் அங்கும் இங்கும் சுற்றி வந்தனர். அப்போது அவர்கள் வைத்திருந்த நாட்டு வெடிகுண்டை கோயில் அருகே உள்ள சாலையில் வீசினர். அந்த நாட்டு வெடிகுண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. இந்த சத்தத்தை கேட்டு பொது மக்கள் அனைவரும் சிதறி ஓடினர், அப்போது அந்த இடம் முழுவதும் புகை மண்டலம் ஆனது. இது குறித்து கண்டமங்கலம் காவல் நிலைய போலீசாருக்கு தகவல் கொடுத்தனர், இதனடிப்படையில் கண்டமங்கலம் போலீசார் வந்து நாட்டு வெடிகுண்டு வீசிய இடங்களை பார்வையிட்டனர். பின்னர் இது குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்த நிலையில் புதுச்சேரி முத்தியால்பேட்டை பகுதியில் பதுங்கியிருந்த அகமது உசேன், வினோத், என்கின்ற சிவா அஜித் ராஜ், ஷெரிப் முகமது, தென்னரசன் ஆகிய 5 பேரையும் போலீஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

வருஷநாடு ஊராட்சியில் கிடப்பில் போடப்பட்ட தார்சாலைக்கான பணி நடந்திட ஊராட்சி மற்றும் மாவட்ட நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்

வருஷநாடு, ஆகஸ்ட் 31 2021: கடமலை மயிலை ஒன்றியம் வருசநாடு ஊராட்சி 17 கூட்டு தெரு முதல் பவள நகர் வரையிலான இணைப்பு சாலைகளுக்கான பணிகள் தொடங்கி ஓராண்டிற்கும் மேலாக உள்ளது. பலதரப்பட்ட போராட்டத்திற்கு பின் மெட்டல் மட்டும் போடப்பட்டு மண்ணால் மூடி உள்ளனர். தற்போது மழைக்காலங்கள் என்பதால் மண் அரிப்பு ஏற்பட்டு சாலை சேதம் அடையும் வாய்ப்பு உள்ளது. இந்த இணைப்பு சாலை வழியாக பவள நகர் வாழவந்தாள் புரம் எருமை சுனை முறுக் கோடை வழியாக தும்மக்குண்டு இணைப்புச் சாலை ஆகும். இச்சாலையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தனியார் திருமண மண்டபம் ரேஷன் கடை என எப்போதும் பரபரப்பான

சாலையில் தார்சாலை அமைக்காத தாள் 108 ஆம்புலன்ஸ் வந்து செல்வதிலும் குடோனில் இருந்து ரேஷன் பொருட்கள் கடைக்கு கொண்டு வருவதிலும் சிரமம் ஏற்படுகிறது. 3000 ஏக்கர் அளவில் விவசாய நிலங்களும் உள்ளது. இதனால் விவசாய இடு பொருள்கள் கொண்டு செல்வதிலும் விவசாய பொருட்களை கொண்டு வருவதிலும் சிரமம் ஏற்படுகிறது மழை காலங்களில் தேங்கி நிற்கும் நீரில் வாகனத்தில் வருவோர் நிலைதடுமாறி விழுந்து காயம் ஏற்படுகிறது. எனவே இந்த மெட்டல் சாலையை விரைந்து தார்சாலைக்கான பணி நடந்திட ஊராட்சி மற்றும் யூனியன் மற்றும் மாவட்ட நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். என இப்பகுதி பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கேட்டுக் கொள்கின்றனர்.

காஞ்சீபுரம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற வல்லக்கோட்டை முருகன் கோவில் செயல் அலுவலர் தற்காலிக வேலை நீக்கம்

காஞ்சீபுரம், ஆக. 31 2021: காஞ்சீபுரம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற வல்லக்கோட்டை முருகன் கோவில் உள்ளது. இந்த கோவில் செயல் அலுவலராக சிந்துமதி என்ற பெண் அதிகாரி செயல்பட்டு வந்தார்.

இதற்கிடையில் இந்த கோவிலில் குளறுபடிகள் நடந்திருப்பதாக சென்னையில் உள்ள தமிழக இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்திற்கு புகார்கள் வந்தன. அதையொட்டி அறநிலையத்துறை ஆணையர் குமரகுருபரன் உத்தரவின் பேரில், அறநிலையத்துறையை சேர்ந்த தணிக்கை குழுவினர் ஒருவாரமாக இக்கோவிலில் தணிக்கை செய்து வந்தனர். அந்த தணிக்கையில் குளறுபடிகள் நடந்திருப்பதாக கூறப்படுகிறது. இதையொட்டி வல்லக்கோட்டை முருகன் கோவில் செயல் அலுவலர் சிந்துமதி தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து அதிகாரி ஒருவர் கூறுகையில்: வல்லக்கோட்டை முருகன் கோவிலில் நடந்த தணிக்கையில் என்னென்ன குளறுபடிகள் நடந்துள்ளது என்பது குறித்து தீவிர விசாரணை நடந்து வருகிறது என்றார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வல்லக்கோட்டை கோவில் செயல் அலுவலர் தற்காலிக வேலை நீக்கம் விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

புதிய அதிகாரி : கோவில் செயல் அலுவலர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டதையொட்டி இக்கோவிலுக்கு புதிய கோவில் செயல் அலுவலராக (பெண்) நற்சேரணை நியமிக்கப்பட்டுள்ளார்.

கடமலை மயிலை ஒன்றியத்தில் ஆட்டோ தொழிலாளர்களின் மனக்குமுறல்கள்

வருஷநாடு, ஆகஸ்ட் 31 2021: தேனி மாவட்டம் கடமலைக்குண்டு மயிலாடும்பாறை ஒன்றியத்தில் அனைத்து கிராமங்கள் மற்றும் மலை கிராமங்களுக்கு ஊராட்சியை மையப்படுத்தி ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆட்டோ தொழிலாளர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் ஆட்டோ தொழிலையே நம்பி குடும்பம் நடத்துதல் குழந்தைகளின் கல்விக் கடன் திருமணம் என பல நிகழ்ச்சிகளுக்கு இந்த வருமானத்தை நம்பி உள்ளனர். இதில் கிடைக்கும் உபரி வருமானத்தை வைத்து ஆட்டோ எப்சி இன்சுரன்ஸ் டாக்ஸி ஆட்டோ பைனான்ஸ் என அனைத்து தேவைகளையும் இந்த ஆட்டோவில் கிடைக்கும் வருமானம் மூலமே நடத்தி வருகின்றனர். இந்நிலையில் தமிழக அரசு மகளிருக்கான இலவச பேருந்து ஒருபுறம் சிரமத்தைக் கொடுக்கிறது இதனால் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. மேலும் காவல் துறையினர் அபராதம் என்ற பெயரில் விதிக்கும் தொகை என அனைத்தையும் நினைத்து பார்க்கும் பொழுது அவர்களின்

மனக்குமுறல்கள் வெளிப்படையாக தெரிகிறது. எனவே காவல்துறையினரின் விதிமீறும் வாகனங்களுக்கு மட்டும் அபராதம் செலுத்த சொன்னால் பரவாயில்லை வழக்கு இல்லை என்பதற்காக அபராதம் விதிக்கப் படுவது வேதனையளிக்கிறது என கூறுகின்றனர். காவல்துறையினரின் அனைத்து விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டு ஆட்டோ ஓட்டி வரும் எங்களை மேலும் சிரமப்படுத்தாதீர்கள் எனவும் காவல் துறையினர் உங்கள் நண்பன் என்ற வாசகத்திற்கு ஏற்ப எங்களது சூழ்நிலையை கருத்தில் கொண்டு கனிவுடன் நடந்தாள் தொழிலாளர்கள் ஆகிய எங்களுக்கு நல்லது என ஆட்டோ தொழிலை நம்பி வறுமையில் வாடும் கடமலை மயிலை ஒன்றிய அனைத்துப் பகுதி ஆட்டோ ஓட்டுனர் நல சங்கத்தின் சார்பாக கேட்டுக் கொள்கின்றனர்.

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள டி.கள்ளிப்பட்டியில் கோவில் உண்டியல் உடைத்து திருட்டு

தேனி, ஆகஸ்ட் 31 2021: தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள டி.கள்ளிப்பட்டி வெங்கடாஜலபுரத்தில் பட்டாளம்மன் முத்தையா சாமி கோவில் உள்ளது. இந்த கோவிலில் பூசாரியாக இருப்பவர் பாலசுப்ரமணியம். இவர் கடந்த வாரம் கோவிலை திறந்து பூஜை செய்துவிட்டு பூட்டிவிட்டார். அப்போது கோவில் கதவின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. இதைக்கண்டு அதிர்ச்சி அடைந்து உள்ளே சென்று பார்த்தபொழுது பீரோவில் வைத்திருந்த உண்டியல் உடைக்கப்பட்டு இருந்தது. அதில் இருந்த பணம் திருடபட்டு இருந்தது .இதுகுறித்து பாலசுப்ரமணியம் பெரியகுளம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் .பெரியகுளத்தில் நான்கு நாட்களாக சாரல் மழை அங்குஇங்குமாய் பெய்கிறது. பொதுமக்களுக்கு சளி இருமல் காய்ச்சல் ஏற்படுகிறது எனவே மருத்துவமனையில் கூட்டம் அதிகமாக உள்ளது .அங்கு சென்றவுடன் கோவிட் பரிசோதனைகள் செய்கிறார்கள். மக்கள் அச்சம் கொள்கின்றனர் .தனியார் மருத்துவமனைக்கு சென்றாலும் இதே நிலை தான் காணப்படுகிறது .வெள்ளிக்கிழமையன்று கோவிலுக்கு சென்றால் அங்கு நடை சாத்தப்பட்டுள்ளது .மிக ஆர்வத்துடன் கேட்டால்வெள்ளி ,சனி மற்றும் ஞாயிறு மூன்று தினங்கள் நடை சாத்தப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. வயதானவர்களும் பொதுமக்களும் கோவிலுக்கு வருகைபுரிந்து ஏமாற்றம் அடைகின்றனர் .பெரியகுளம் மாநகரில் நான்கு தினங்களாக தெரு விளக்குகள் பகல் 12 மணி வரை எரிகின்றன .பொதுமக்கள் தங்கள் வீட்டில் ஒருநாள் மின்சாரம் இல்லை என்றால் மின்வாரியத்திற்கு தகவல் கூறுகின்றனர் . அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது .கல்வி பயிலும் குழந்தைகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே மின் வாரியத்திற்கும் தினதோறும் காலை ஆறு மணிக்கு தெரு விளக்கு அணைப்பதற்கு சரியான நபரை நியமிக்கும்படி பொதுமக்கள் கோரிக்கைவைக்கின்றனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

விக்கிரவாண்டி அடுத்த பேரணி கிராமத்தில் வயல்வெளிசாலையில் பனைவிதை நடும் விழா

விக்கிரவாண்டி, ஆக. 31 2021: விக்கிரவாண்டி அடுத்த பேரணி கிராமத்தில் வயல்வெளிசாலையில் பனைவிதை நடும் விழா நடந்தது.

திண்டிவனம் வட்டம் பேரணியில் டாக்டர். அப்துல் கலாம் நற்பணி மன்ற இளைஞர்கள் சார்பில் கிராம ஏரிக்கரை ஓரத்திலுள்ள வயல்வெளிசாலைகளில் ஆயிரம் பனை விதைகளை பொதுமக்கள் நட்டனர். 2021 ஆண்டு இறுதிக்குள் ஒரு லட்சம் பனை விதைகளை இலக்கு வைத்து நடும் பணியை துவக்கினர் . நிகழ்ச்சியில் மன்ற தலைவர் பாக்கியராஜ், நிர்வாகிகள் குமரகுரு, ராமலிங்கம் ,சவுந்தர்ராஜன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

விக்கிரவாண்டி அடுத்த பேரணி ஏரிக்கரையில் அப்துல் கலாம் நற்பணி மன்றத்தினர் பனைவிதைகளை நடும் பணியில் ஈடுபட்டனர்.

இ-சேவை மையம
ஸ்டார் ரெயின்போ மையம்
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
8148231942 - 8144337349;
பொது இ-சேவை மையம
ALL ONLINE SERVICES

கன்னியாகுமாரி: குமரிமாவட்டம் திருவட்டார் பேருந்து நிலையத்தில் சொகுசு காரில் விஷம் குடித்த நிலையில் அதிமுக பிரமுகர் பிணமாக மீட்பு.

தேனி: தேனி மாவட்டம், பெரியகுளத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பெட்ரோல் டீசல் சமையல் எரிவாய்வு விலை உயர்வு பொகாஸஸ் மூலம் தொலைபேசி ஒட்டுக்கேட்பு போன்ற மக்களுக்கு எதிரான நடைமுறையை கடைபிடிக்கும் மத்திய அரசை கண்டித்து அண்ணாதுரை, ரமேஷ் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் 50 க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்.

திண்டிவனம்: விழுப்புரம் மாவட்டம், மயிலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெரியதச்சூர் அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் உள்ள பாரதி என்பவரின் கூரை வீடு கடந்த 26ஆம் தேதி மின்கசிவு காரணமாக தீப்பற்றி எரிந்து தீயில் கருகி சேதமடைந்தது. இதுகுறித்து தகவலறிந்த திண்டிவனம் தொழிலதிபர் சந்திரசேகர் விபத்தில் சேதமடைந்த பாரதி குடும்பத்திற்கு ரூ 10,000 நிதி உதவி மற்றும் மளிகை சாமான்கள் வீட்டு உபயோகப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வன்னியர் சங்க மாவட்ட செயலாளர் நந்தகோபால், மாநில இளைஞரணி செயலாளர் பிரேம்குமார், ஒன்றிய செயலாளர் துரைராஜ், மாவட்ட தொண்டரணி செயலாளர் ராமச்சந்திரன், மாவட்ட ஆட்டோ தொழிற்சங்க செயலாளர் தேசிங்கு, மாவட்ட ஊடகப்பிரிவு செயலாளர் கேசவன் மற்றும் ஜெயமூர்த்தி, மதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேனி மாவட்டத்தில் தங்கம்மாள் புரத்தில் பயன்பாடற்ற நிலையில் வேளாண் விற்பனை கூடம்

வருஷநாடு ஆகஸ்ட் 31 2021: தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டம் கடமலை மயிலை ஒன்றியம் தங்கம்மாள்புரம் ஊராட்சியில் கடந்த 2002 ஆம் ஆண்டு இப்பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று அன்றைய முதல்வர் மறைந்த ஜெயலலிதா அவர்களால் இப்பகுதி மக்களுக்கு கட்டப்பட்டது. இந்த வேளாண் விற்பனை கூடம். இப்பகுதியில் மலை கிராமம் அதிகமாக உள்ளதால் அப்பகுதியில் விளையும் கொட்டை முந்திரி இலவம்பஞ்சு தனியாருக்கு விற்பனை செய்யாமல் இடைத்தரகர்கள் இன்றி அரசே நேரடியாக கொள்முதல் பெற்று அரசு நிர்ணயித்த விலை விவசாயிகளுக்கு கிடைக்க கூடிய வகையில் தொடங்கப்பட்டது. ஒன்று இலவம்பஞ்சு பயிரிடுவோர் கூட்டுறவுச்சங்கம் 2 கொட்டை முந்திரி பதப்படுத்தும் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் என இரண்டு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்காக 9.99 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு 3 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 80 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு பெரிய குடோன்கள் உலர் கலம் அலுவலகம் என கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்தது. இதனால் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பலன் அடைந்தனர் உற்பத்தியாளர்கள் மெத்தை தலையணை தயாரித்து மிகவும் குறைந்த விலைக்கு கொடுத்தனர். இதனால் இப்பகுதி மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர் இப்பகுதியில் உள்ள தொழிலாளர்களே வேலைக்கு அமர்த்திய தால் வேலை தட்டுப்பாடின்றி சிறப்பாக நடந்து கொண்டிருந்த இந்த சங்கம் 2018 ஆம் ஆண்டு சங்கம் கடனில் உள்ளதாக கூறி அன்றைய நிர்வாகம் வேளாண் விற்பனைக் கூடத்தை இழுத்து மூடியது இதிலிருந்து ஒரு சங்கம் தனியாக பிரித்து தற்பொழுது கோயில் பாறையில் செயல்பட்டு வருகிறது. எனவே மாவட்ட நிர்வாகம் இப்பகுதி விவசாயிகளின் நலன் கருதி பல லட்சங்கள் செலவு செய்து கட்டப்பட்ட இக்கட்டிடத்தை மீண்டும் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும். என கோரிக்கை வைக்கின்றனர். 2002ஆம் ஆண்டு அதிமுக அரசால் துவங்கப்பட்டு அதிமுக ஆட்சியிலேயே மூடப்பட்ட கட்டிடத்தை இன்றைய தமிழக முதல்வர் பயன்பாட்டிற்கு கொண்டு வருவார். என எதிர்பார்ப்பில் கடமலை மயிலை ஒன்றிய விவசாயிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். கோரிக்கையை நிறைவேற்றுவாரா தமிழக முதல்வர் மக்களின் கனவு நனவாகும் என்ற நம்பிக்கையில் விவசாயிகளும் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் எதிர்பார்க்கின்றனர்.

வருஷநாடு ஊராட்சியை மையப்படுத்தி மலை கிராமங்களுக்கு பஸ் வசதி கேட்டு பொதுமக்கள் கோரிக்கை

வருஷநாடு ஆகஸ்ட் 31 2021: ஆண்டிபட்டி வட்டம் கடமலை மயிலை ஒன்றியம் வருஷநாடு ஊராட்சியை மையப்படுத்தி சிங்கராஜ புரம் வெள்ளிமலை சின்ன சுருளி குமணன் தொழு உட்பட 40க்கும் மேற்பட்ட மலை கிராமங்கள் உள்ளது. இந்த கிராமத்தில் இருந்து அருகிலுள்ள கிராமங்களுக்கு பள்ளி குழந்தைகள் நடந்து வர வேண்டிய சூழல் உள்ளது. இதனால் ஆசிரியர்களும் குழந்தைகளும் சரியான நேரத்திற்கு பள்ளிக்கு செல்ல முடியவில்லை 15-ஆம் நூற்றாண்டை போல இப்பகுதி மக்கள் பேருந்து வசதி இன்றி வாழ்ந்து வருகின்றனர். வெள்ளிமலை பகுதியில் பஸ் போக்குவரத்து இவ்வழியாக இல்லாததால் சரியான நேரத்திற்கு கூலி வேலைக்கு செல்ல முடியாமல் தவிக்கின்றனர். இதனால் விவசாயிகளும் வேலையாட்களும் என இரு தரப்பட்ட மக்களும் பாதிப்படைகின்றனர். மேலும் மலை கிராமத்தில் இருந்து வருஷநாடு மயிலாடும்பாறை கடமலைக்குண்டு போன்ற பெரும் கிராமங்களுக்கு பொருட்கள் வாங்க விற்க செல்வது வழக்கம் பேருந்து வசதி இல்லாததால் அதிக கட்டணம் செலுத்தி செல்ல வேண்டிய அவல நிலையும் உள்ளது. இப்பகுதியில் மகன் அல்லது மகள் யாருக்கேனும் திருமணம் வெளியூர்களிலிருந்து பேசினாள் பேருந்து வசதி இல்லை. என்ற ஒரே காரணத்தினால் பல திருமணங்கள் தடைபட்ட நிகழ்வுகளும் நடந்துள்ளது. இன் நிகழ்வுகளுக்காக வேவிவசாய நிலங்களை விட்டு விட்டு பேருந்து இயக்கக்கூடிய நகரங்களுக்கு குடியேறுகின்றனர். இதனால் விவசாயம் பால் அடைகிறது. சின்ன சுருளி சுற்றுலா தளமாக கருதிய இப்பகுதி மக்கள் பேருந்து வசதி இல்லாததால் வெளியில் பலருக்கு தெரியாமல் உள்ளது. எனவே பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுத்தது. இப்பகுதியில் சுற்றுலா தளத்தை மேம்படுத்த வேண்டுமென சமூக ஆர்வலர்களும் இப்பகுதியில் வாழும் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பேருந்து வசதி ஏற்படுத்தி தர மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை வைக்கின்றனர். இப்பகுதி மக்களையும் மனிதர்களாக நினைத்து 21 ஆம் நூற்றாண்டில் வாழ்கின்றோம் என்பதை இப்பகுதி மக்களுக்கு நினைவு படுத்த வேண்டும் என்று வேதனையுடன் கூறுகின்றனர்.

அதிக பாரம் ஏற்றி வந்த லாரிக்கு அபராதம் விதித்ததால், தீ குளிக்க முயன்ற டிரைவரை வேப்பூர் போலிசார் கைது செய்தனர்

வேப்பூர், ஆகஸ்ட் 31 2021: வேப்பூர் கூட்டுரோட்டில் ஓவர் லோடு என லாரிக்கு அபராதம் விதித்த போலிசாரை கண்டித்து சாலையின் நடுவே லாரியை நிறுத்தி தீ குளிக்க முயன்ற டிரைவரை போலிசார் கைது செய்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், விருகாவூர் மெயின்ரோடு பகுதியை சேர்ந்த உஸ்மான் மகன் ஜானி (வயது 41), இவருக்கு சொந்தமான. டி.எண்.34, எல்.1369 என்ற டாராஸ் லாரியில் சிமெண்ட் மூட்டைகள் ஏற்றிக்கொண்டு 28-ந் தேதி மாலை ஆறு மணியளவில் விருத்தாசலம் சாலையில் வேப்பூர் நோக்கி வந்து கொண்டிருந்தார். வேப்பூர் சேலம் சாலையில் கூட்டுரோடு அருகே சிறப்பு உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி, காவலர் பாரதிமோகன் ஆகியோர் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தனர் அப்போது ஜானி ஓட்டி வந்த லாரியை சோதனை செய்த போது அதிக பாரம் ஏற்றி வந்தது தெரியவந்தது. அதனால் சிறப்பு உதவி ஆய்வாளர் அவருக்கு அபராதம் விதித்தார். ஜானி அபராதம் கட்டிவிட்டு சற்று தூரம் சென்று கூட்டுரோடு நான்குமுனை ரோடு அருகே லாரியை சாலையின் குறுக்கே நிறுத்திவிட்டு, லாரியிலிருந்து கீழே இறங்கி உடனடியாக தன் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீவைக்க முயன்றார். இதை, பார்த்தவர்கள் ஓடி வந்து அவர் மீது தண்ணீரை ஊற்றி தீ குளிக்க முயன்றதை தடுத்து நிறுத்தினார், அப்போது போலீசாருக்கு எதிராக கோசமிட்டு போலிசாரை கண்டபடி திட்டினார். இதனால் வேப்பூர் கூட்டுரோட்டில் சுமார் 20 நிமிடம் போக்குவரத்து பாதிக்கபட்டது.

இது குறித்து தகவலறிந்த வேப்பூர் உதவி ஆய்வாளர்கள் ரவிசந்திரன், சந்திரா, தலைமை காவலர்கள் சதீஸ், ராஜீ, ஆகியோர சம்பவ இடத்திற்கு வந்து லாரியை

அப்புறபடுத்தி ஓட்டுனர் ஜானியை காவல் நிலையம் அழைத்து சென்று போக்குவரத்தை சரி செய்தனர். பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி, லாரி டிரைவர் ஜானி மீது அளித்த புகாரின் பேரில் எஸ்ஐ சந்திரா வழக்கு பதிவு செய்து ஜானியை கைது செய்தனர்.

சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரியில் பயணிகளை ஈர்க்கும் வகையில் கடைகளின் கட்டமைப்பை மாற்றி அமைத்து தர வேண்டும் என பேரூராட்சி நிர்வாகத்திற்கு உருட்டு வண்டி வியாபாரிகள் முன்னேற்ற சங்கம் கோரிக்கை

கன்னியாகுமரி, ஆகஸ்ட் 31 2021: சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரியில் பயணிகளை ஈர்க்கும் வகையில் கடைகளின் கட்டமைப்பை மாற்றி அமைத்து தரவேண்டும் என பேரூராட்சி நிர்வாகத்திற்கு உருட்டு வண்டி வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரியில் சுமார் 200-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் உருட்டு வண்டியில் வியாபாரம் செய்து வந்தனர். அவர்களுக்கு பேரூராட்சி நிர்வாகம் சார்பில் கார் பார்க்கிங் அருகே 200 கடைகள் கட்டிக் கொடுக்கப்பட்டு அதற்கு ரூபாய் 40 ஆயிரம் அட்வான்ஸ் வருடத்திற்கு இருபத்தி எட்டு ரூபாய் வாடகையும் நிர்ணயித்து வசூல் செய்து வந்தனர். கொரானா ஊரடங்கு காலத்தில் கடந்த இரண்டு வருடங்களாக வாழ்வாதாரம் இன்றி தவித்து வரும் வியாபாரிகளுக்கு மேலும் பணி சுமையாக வாடகை உயர்த்தி தருமாறு பேரூராட்சி சார்பாக கேட்டதின் பேரில் வியாபாரிகள் அனைவரும் மனக் கொந்தளிப்பில் உள்ளனர். இவர்கள் இன்று திடிரென கடற்கரை சாலையில் உள்ள அவர்களது கடை முன்பு திரண்டு பேரூராட்சி நிர்வாகத்திற்கு கோரிக்கை மனு ஒன்றை கூறி மனக்குமுறலை செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். அதில் கூறப்பட்டுள்ளது; நாங்கள் சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரியில் காமராஜர் மணிமண்டப கடற்கரை சாலையில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக உருட்டு வண்டியில் வைத்து வியாபாரம் செய்து வருகிறோம்.

எங்களுக்கு கன்னியாகுமரி பேரூராட்சி நிர்வாகம் சார்பில் கடந்த 2015-ம் ஆண்டு முதல் ,சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முன்புள்ள காலியான பகுதியில் 168- கடைகள் கட்ட இட ஒதுக்கீடு செய்து கடைகளை கட்டமைத்து தந்தனர்.

இதில் கடற்கரை சாலையில் முகப்பு பகுதியில் உள்ள 23- கடைகளை தவிர மீதமுள்ள 145 கடைகளில் எந்த வியாபாரமும் நடைபெறாமல் மூடப்படும் சூழல் ஏற்பட்டது .

இதனால் வியாபாரம் ஏதுமின்றி வியாபாரிகளின் குடும்பங்கள் வறுமைக்கு தள்ளப்பட்டுள்ளது. தற்போது பேரூராட்சி நிர்வாகத்திற்கு வருடத்திற்கு இருபத்தி எட்டு ரூபாய் வாடகை கட்டணம் கூட செலுத்த முடியாமல் சிக்கித் தவித்து உள்ளோம். எனவே கன்னியாகுமரி பேரூராட்சி நிர்வாகம் இந்த கடைகளை மாற்றி கட்டமைத்து சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் வேறு பகுதியில் மாற்றி தர வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனு கன்னியாகுமரி பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், தமிழக முதலமைச்சர் தனிப்பிரிவு அனைவருக்கும் ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பி வைத்துள்ளோம் என தெரிவித்தனர். இரவு நேரத்தில் மீதமுள்ள கடைகள் சமூக விரோதிகளின் கூடாரமாக செயல்படுகிறது மது மாது போன்ற தீய செயல்களில் சுற்றுலா பயணிகளும் உள்ளூர் வாசிகளும் செயல்பட்டு வருகின்றனர் இதனால் இதனை மாற்றி நேர்வழியில் தருமாறு பேரூராட்சி நிர்வாகத்திற்கும் தமிழக அரசிற்கும் கோரிக்கை வைத்துள்ளனர்.

ஒரு லட்சம் பனை விதைகளை நடவு செய்த சமூக ஆர்வலர்கள்!

மேல்மலையனூர், ஆக. 31 2021: விழுப்புரம் மாவட்டம் அவலூர்பேட்டை பஞ்சாயத்துக்குட்பட்ட ஏரிகரை மற்றும் சாலையோரங்களில் கடந்த ஒரு மாதமாக சேகரிப்பட்ட ஒரு லட்சம் பனணவிதைகளை நடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தமிழகத்தின் மரம் என சிறப்பு பெற்ற பனை மரத்திற்கும் தமிழர்களுக்கும் பன்டைய காலங்களிலிருந்தே நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பனை மரத்தினை பாதுகாக்க தமிழக அரசு வேளான் சட்ட மசோதாவில் பனை மரங்களை வெட்ட மாவட்ட ஆட்சியர் ஆணை வேண்டும் எனவும் பனை தொழிலை ஊக்குவிக்கவும் பட்ஜெட்டில் 3 கோடி நிதி ஒதுக்கியதின் மூலம் பனை தொழிலை நம்பியுள்ள பல ஆயிரம் குடும்பத்தினர் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

மேலும் பனை மரத்தின் அனைத்து பாகங்களும் மனிதர்களுக்கு முக்கிய பயன் வகிக்கிறது. இதனால் சமூக ஆர்வலர்கள் பனை மரங்களை காக்கவும் புதிய பனை மரங்களை நடவும் ஆர்வம் காட்டி வரும் நிலையில் அவலூர்பேட்டையில் மேல்மலையனூர் வட்டார

வளர்ச்சி அலுவலர் தேவராஜ். தலைமையில் தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் சங்கம் சார்பில் வட்டதலைவர் பாலசுப்ரமணி, மற்றும் வேளான் துறை அலுவலர் சக்திவேல் சமூக ஆர்வலர் ஜான் தலைமையிலான குழு ஒரு லட்சம் பனை விதைகளை சேகரித்து அவற்றை நடும் பணியினை அவலூர்பேட்டை சுற்றுவட்டார பகுதிகளில் மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய செயல்பாட்டினை பல்வேறு தரப்பினரும் பராட்டி வருகின்றனர்.

மேலும் ஒரு லட்சம் பனை விதைகள் மற்றும் பல வகை மரங்களை நடும் விழாவில் அவலூர்பேட்டை வருவாய் ஆய்வாளர் தஸ்தகீர், தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் சங்க மாவட்ட தலைவர் பாலாஜி மற்றும் மாவட்ட சட்ட பிரிவு செயலாளர் அன்பழகன் மேலும் வட்டச் செயலாளர் விநாயகமூர்த்தி வட்ட பொருளாளர் நரேந்திரன் கிராம நிர்வாக அலுவலர் சங்க உறுப்பினர்கள் ராஜேஷ், தனசேகரன், இளவரசன், மோனிஷா, கார்த்திகேயன், வெங்கடேசன், முருகன், மோகன் ராஜ், மணிகண்டன், சரவணன், அகிலன், சரவணன், கார்த்திகேயன், பார்த்திபன், ராஜேந்திரன், ஏழுமலை, தமிழரசன், யுவராஜ், வெங்கடேசன், வேலுச்சாமி, ஜெயப்பிரகாஷ், நதியா, ராமமூர்த்தி, அருண்பாண்டியன், தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் சங்கத்தைச் சார்ந்த அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களும் கலந்துகொண்டு பனை விதைகளை நட்டு விழாவை சிறப்பித்தனர்.

சொந்தவீடு கட்டப்போகிறீர்களா? அனைத்து ஆலோசனைகளும் இலவசம்! அறிமுகம் செய்கிறது பில்ட் ஈசி நிறுவனம்

சென்னை, ஆகஸ்ட் 31 2021: சொந்த வீட்டுக் கனவில் இருப்போருக்குத் தேவையான அனைத்து விதமான ஆலோசனைகளையும் இலவசமாக அளிக்கும் சேவையை சென்னையைச் சேர்ந்த பில்ட் ஈசி நிறுவனம் தொடங்கியுள்ளது. நாட்டிலேயே முதன் முறையாக இதற்கான சேவை மையத்தை சென்னை அம்பத்தூர் வரதராஜபுரத்தில் அந்நிறுவனம் தொடங்கியிருக்கிறது. வாடகை வீடுகளில் வாழ்வோர் சந்திக்கும் சவால்கள் அதிகம். அதிலும் குறிப்பாகப் பெருநகரங்களில் உயர்ந்து வரும் வாடகை, இடநெருக்கடி, மாசுபாடுகள், சுதந்திரமின்மை என்று பெரிய பட்டியலே இருக்கிறது. இதிலிருந்து விடுதலை பெற ஒரே வழி சொந்தவீடு தான்.

ஆனால், சொந்தவீடு என்று வரும்போது ஏகப்பட்ட கேள்விகள் நம் கண்முன்னே நிற்கின்றன. தனிவீடா?வில்லாவா?அடுக்குமாடிக்குடியிருப்பா? நகரத்துக்குள் வீடு இருந்தால் சரியா? அல்லது விலை குறைவாக புறநகர்ப் பகுதிகளுக்குப் போய் விடலாமா?நமது பட்ஜெட்டில் எங்கு வீடு/ வீட்டுமனை / அடுக்குமாடிக் குடியிருப்பு கிடைக்கும்? அவற்றை வாங்கும்போது கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்னென்ன? வரைபட அனுமதி எங்கு வாங்க வேண்டும்? வீடு கட்ட நிதியைத் திரட்டுவது எப்படி? பாதுகாப்பு அம்சங்களை எப்படி உறுதி செய்வது?... என்று இக்கேள்விகள் தனிப் பட்டியலாக இருக்கின்றன.

இவை எல்லாவற்றுக்கும் விடை சொல்லும் ஒரு ஆதரவுக்கரம் இருந்தால் நன்றாக இருக்குமே என்று அனைவரும் எண்ணுவர். "அந்தக் கரங்கள் எங்களுடையவை" என்கிறார் பில்ட் ஈசி நிறுவனத்தின் சென்னை கிளைத் தலைவர் ஷர்மா ரவி ராஜ் அவர்கள்.

அவர் பேசும்போது, "புதிதாக வீடு கட்டுவோருக்கு பல ஐயங்கள் எழும். கட்டுமானப் பணியை சொந்தமாகச் செய்வதாக இருந்தாலும் சரி, அல்லது ஒப்பந்தக்காரரிடம் பொறுப்பை ஒப்படைப்பதாக இருந்தாலும் சரி பல்வேறு விஷயங்களை நீங்கள் அறிந்து வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் தேவையற்ற மனவருத்தங்களும் பொருள் இழப்பும் ஏற்படும். இதனைத் தவிர்ப்பதற்காகவே இலவச ஆலோசனை வழங்கும் சேவையை நாங்கள் தொடங்கியிருக்கிறோம். வீட்டு மனை வாங்குவதில் தொடங்கி, புது மனை புகு விழா வரை அனைத்து கட்டங்களிலும் தேவைப்படும் ஆலோசனைகளை இலவசமாக வழங்குவதே எங்கள் நோக்கம் ஆகும். இதற்காக சென்னை அம்பத்தூரில் சேவை மையம் தொடங்கப்பட்டுள்ளது. படிப்படியாக, நாடு முழுவதிலும் உள்ள முக்கிய

நகரங்களிலும் இரண்டாம் நிலை நகரங்களிலும் இச்சேவை விரிவுபடுத்தப்பட இருக்கிறது.

இச்சேவையைப் பெற விரும்புவோர் மூன்று வழிகளில் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்:

தொலைபேசி வழி சேவை (எண்: 730 5448 485)

சேவை மையத்துக்கு நேரில் வந்து ஆலோசனைகளைப் பெறுதல்.

எமது பில்ட் ஈசி ஊழியர்கள், வாடிக்கையாளரின் இடத்துக்கே சென்று சேவையளித்தல்.

நாட்டிலேயே இது போன்ற சேவையை, இலவசமாக வழங்கும் சேவை தமிழகத்தில் தான் அறிமுகப்படுத்தப்படுகிறது, வீடு கட்ட எண்ணுவோர் பில்ட் ஈசி நிறுவனத்தின் முதல் கிளையான அம்பத்தூர் பில்ட் ஈசி சேவை மையத்தை நாடி, வல்லுனர்களிடம் சிறந்த ஆலோசனைகளை பெறலாம்" என்றார் அவர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

செவ்வாய்க்கிழமை,
ஆகஸ்ட் 31, 2021

கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு தொடர்ச்சி மலைகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

கன்னியாகுமரி, ஆகஸ்ட் 31 2021: கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு தொடர்ச்சி மலைகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரி கடற்கரைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் வருகை மிக குறைவாக உள்ளது. மேலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதால் சூரிய உதயம் மற்றும் அஸ்தமனம் பார்க்கமுடியாமல் ஏமாற்றம்- குடைப்பிடித்தப்படியே கடல் அழகை ரசித்து வருகின்றனர். குமரிமாவட்டம் முழுவதும் பெய்து வரும் தொடர் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு.

கன்னியாகுமரி: மறைந்த முன்னாள் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய பி. வசந்தகுமார் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினரும் ஒன்றிய கழகச் செயலாளருமான என்.தாமரைபாரதி தலைமையில் திமுகவினர் பி.வசந்தகுமார் உருவ சிலைக்கு மலர்மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தினர். உடன் மாவட்ட துணைச் செயலாளர் முத்துசாமி, அகஸ்தீஸ்வரம் பேரூர் திமுக செயலாளர் பா.பாபு, தென்தாமரைகுளம் பேரூர் கழக செயலாளர் பூவியூர்காமராஜ், பேரூர் அவைத்தலைவர் கணேசன், பேரூர் பொருளாளர் அகஸ்தியலிங்கம், ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் ஜாணிகிரிஸ்டல் தாஸ் உட் பட பலர் உடனிருந்தனர்.

கன்னியாகுமாரி: குமரிமாவட்டம் திருவட்டார் பேருந்து நிலையத்தில் சொகுசு காரில் விஷம் குடித்த நிலையில் அதிமுக பிரமுகர் பிணமாக மீட்பு.

கன்னியாகுமரி: சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரியில் பயணிகளை ஈர்க்கும் வகையில் கடைகளின் கட்டமைப்பை மாற்றி அமைத்து தரவேண்டும். என பேரூராட்சி நிர்வாகத்திற்கு உருட்டு வண்டி வியாபாரிகள் கோரிக்கை-மேலும் கன்னியாகுமரி கடற்கரை பகுதியில் இரவு நேரத்தில் பயன்பாடு இல்லாமல் பாழடைந்து இருக்கும் கடை சமூக விரோதிகளின் கூடாரமாக செயல்படுகிறது. இதில் சுற்றுலா பயணிகளும் உள்ளூர் வாசிகளும் சமூக விரோத செயல்களில் ஈடுப்படாவதாக குற்றம் சாட்டு- உடனே கன்னியாகுமரி பேரூராட்சி நிர்வாகம் கடைகளை புதுப்பித்து வியாபாரிகளின் பயன்பாட்டிற்கு தருமாறு உருட்டு வண்டி வியாபாரிகள் கோரிக்கை.

தூத்துக்குடி: தூத்துக்குடி, தமிழ்நாடு பண்ணையார் சமுதாயத்தின் சார்பில்10/5% உள்ள இட ஒதுக்கீட்டை ரத்து செய்யக்கோரி தூத்துக்குடி விவிடி சிக்னல் அருகே கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் தமிழ்நாடு பண்ணையார் சமுதாயத்தை சேர்ந்த மக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஊத்தங்கரை அருகே ஏழை மக்களுக்கு இலவச ஆடுகள் மற்றும் புடவைகள் வழங்கப்பட்டன

ஊத்தங்கரை ஆக:31 2021: கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த ஓலைப்பட்டி கள்ளிக்கான் கொட்டாய் கிராமத்தில் தமிழ்நாடு சமூக சேவகர் கூட்டமைப்பின் மாநில தலைவர் ஜான்பீட்டர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, கிருஷ்ணகிரி தமிழ்நாடு சமூக சேவகர் கூட்டமைப்பின் சார்பில் மாநில ஒருங்கினைப்பாளர் முருகம்மாள் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பச்சையம்மாள் அறக்கட்டளை தலைவர் அருள்மனி அவர்கள் முன்னிலையில் ஐந்து பெண்களுக்கு இலவச ஆடு மற்றும் ஐம்பது பெண்களுக்கு இலவச சேலைகள் வழங்கப்பட்டது, தொடர்ந்து நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்ட சமூக சேவகர் கூட்டமைப்பின் நலவாரியம் அமைப்பது குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது, இதில் மாவட்ட தலைவர் ஆதிமூலம் அவர்கள் கலந்து கொண்டு நன்றி தெரிவித்தார்.

மயிலம் அருகே ரயில் என்ஜினில் அடிபட்டு இறந்த மயில் ரயில்வே பாதுகாப்பு படை மூலம் வனத்துறையில் ஒப்படைப்பு

திண்டிவனம், ஆக. 31 2021: மயிலம் அருகே ரயிலில் அடிபட்டு இறந்த மயில் வனத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த மயிலம் சுற்றுவட்டார பகுதிகளில் அதிகளவில் மக்கள் நடமாட்டம் உள்ளது இங்குள்ள மயிலம் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மயில்கள் அதிக அளவில் சுற்றித் திரிக்கின்றன. இந்நிலையில் நேற்று காலை 8.10 மணியளவில் திருச்சியிலிருந்து சென்னை நோக்கிச் சென்றார் விரைவு ரயிலில் ஒரு மயில் அடிபட்டு இறந்தது. அந்த மயிலை ரயில் எஞ்சின் டிரைவர் எடுத்துச் சென்று திண்டிவனம் ரயில்வே பாதுகாப்பு படை உதவி ஆய்வாளர் தேசிங்கிடம் ஒப்படைத்தார். மயிரை கைப்பற்றிய உதவி ஆய்வாளர் திண்டிவனம் வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து திண்டிவனம் ரயில் நிலையத்திற்கு வந்த வனத்துறையினர் இறந்த மயிலை பெற்றுச் சென்றனர்.

ஸ்ரீ ஆண்டாள் பக்தர்கள் பேரவை இணைந்து நடத்தும் ஆக்சிஜன் செறிவூட்டும் இயந்திரத்தினை அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி வழங்கினார்

திருவண்ணாமலை, ஆகஸ்ட் 31 2021: திருவண்ணாமலை தெற்கு மாவட்டம் போளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கேளூர், பேட்டை, காலசமுத்திரம், சந்தவாசல், வாழியூர் மற்றும் களம்பூர் ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளுக்கு சேவா இன்டர்நேஷனல் CHENNAI CENTRE For GLOBAL STUDIES ஸ்ரீ ஆண்டாள் பக்தர்கள் பேரவை இணைந்து நடத்தும் ஆக்சிஜன் செறிவூட்டும் இயந்திரத்தினை திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சர், கழக விவசாயப் பிரிவுச் செயலாளர், போளூர் சட்டமன்ற உறுப்பினர், அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி.எம்எல்ஏ வழங்கினார். உடன் ஸ்ரீ ஆண்டாள் பக்தர்கள் பேரவை மாவட்ட செயலாளர் ஏ. பழனி, ஸ்ரீ ஆண்டாள் பக்தர்கள் பேரவை விழுப்புரம் மண்டல ஒருங்கிணைப்பாளர் தில்லை வெங்கட்ராமன், ஸ்ரீஆண்டாள் பக்தர்கள் பேரவை விழுப்புரம் மாவட்ட தலைவர் கே. ஜவஹர், போளூர் வட்டார மருத்துவ அலுவலர்அலுவலர் Dr.âv. சுந்தர், மாவட்ட அவைத்தலைவர் இ.என். நாராயணன், மாவட்ட துணை செயலாளர் ஏ.செல்வம், போளூர் தொகுதி பொதுக்குழு உறுப்பினர் ஏ.ராஜன், போளூர் பேரூராட்சி செயலாளர் நி.பாண்டுரங்கன், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் குருவிமலை ஏ.கார்த்திகேயன், மாவட்ட முன்னாள் கவுன்சிலர் இ.செந்தில்குமார், சேத்துப்பட்டு கிழக்கு ஒன்றிய செயலாளர் இ.ஸ்ரீதர், சேத்துப்பட்டு மேற்கு ஒன்றிய செயலாளர் பி.ராகவன், பெரணமல்லூர் மேற்கு ஒன்றிய செயலாளர் வீரபத்திரன், துரிஞ்சாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஏ.கோவிந்தராஜ், திருவண்ணாமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் ஏ.ஏ.ராமச்சந்திரன், மற்றும் கழக தொண்டர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

அகஸ்தீஸ்வரத்தில் வசந்தகுமார் அவர்களுக்கு மணிமண்டபம்

அகஸ்தீஸ்வரத்தில், ஆகஸ்ட் 31 2021: மறைந்த முன்னாள் எம்பி.எச். வசந்தகுமார் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் நேற்று கொண்டாடப்பட்டது. அவரது சொந்த ஊரான அகஸ்தீஸ்வரத்தில் உள்ளது.

